## 25

# புயலின் மையத்தில் அமைதி

## (7:1–8)

*நானும் எனது மனைவியும் ஓக்லஹாமா நகரத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தபோது ஒரு புயல் தாக்கியது. எங்களுக்கு முன்னால் இருந்த சாலை ஒரு நிமிடம் உலர்ந்திருந்தது; அடுத்த நிமிடத்தில், நாங்கள் மழையினால் தாக்கப்பட்டோம். மின்னல் மேகங்களுக்கு ஒளியூட்டியது; இடிமுழக்கமானது காரைப் புரட்டிப்போடும் அளவுக்கு மிகவும் பலத்த சத்தமாய் இருந்தது. சாலையைப் பார்வையில் காத்துக்கொள்வதற்கு நான் முன்னாகச் சாய்ந்து, காரின் கண்ணாடி வழியே உற்றுநோக்க வேண்டிய தாயிற்று. புயல் வலுவாய் அதிகரித்தது, அது காரைத் தள்ளாடச் செய்தது. நாங்கள் புயலினால் விரட்டப்பட்டபோது, நெடுஞ்சாலையோரமாக காரை நிறுத்த ஏறக்குறைய நான் முடிவுசெய்தபொழுது புயலைவிட்டு வெளியே வந்தோம். திடீரென்று வானம் நீலநிறமாயிற்று; சூரிய ஒளி (காரின்) ஜன்னல்கள் வழியாகப் பாய்ந்து வந்தது. எங்களுக்கு முன்பாக கொதிக்கும் மேகங்களும் குதிக்கும் மின்னல்களும் ஒளிவீசின; எங்கள் பயணத்தில் இன்னும் அதிகமான புயல்கள் காத்திருந்தன - ஆனால் அந்தக் கணத்திற்கு எல்லாம் அமைதியாய் இருந்தது. சற்று நேரமாவது நாங்கள் பாதுகாப்பாக இருந்தோம்.*

*வெளிப்படுத்தின புத்தகத்தினூடே நமது பயணம் அந்த அனுபவத்தைப் போன்றதாகவே உள்ளது: நாம், அதிகாரம் 6ன் புயல் களினூடே வெடித்தெழுந்து அதிகாரம் 7ன் பிரகாசமான சூரிய ஒளிக்குள் வருகிறோம். இன்னும் அதிகமான புயல்கள் காத்துள்ளன; ஆனால் இந்தக் கணத்திற்கு, பூமியின் மேற்பரப்பு அமைதியாக உள்ளது.*

*அதிகாரம் 7ன் காட்சிகள், வெளிப்படுத்தின விசேஷத்தைத் தொடக் கத்தில் வாசிக்க கேட்டவர்களுக்கு ஒரு வியப்புக்குரியதாக வந்திருக்கலாம். முதல் ஆறு முத்திரைகள் விரைவான வரிசையொன்றில் உடைக்கப்பட்டன. அடுத்ததாக ஏழாவது முத்திரை உடைக்கப்படும் என்று (வாசிக்க) கவனித்தவர்கள் எதிர்பார்த்து இருந்திருக்கலாம்; ஆனால் நாம் (8:1ல்) அதைப் பெறுவதற்கு முன்பு, "ஒரு இடையிசை" அல்லது ஒரு "அடைப்புக் குறி" என்று விளக்கவுரையாளர்கள் அழைக்கும் ஒரு விஷயத்தைக் கொண்டுள்ளோம்: அரியணையைச் சுற்றிலும், அடையாளத்துவ முத்திரை யிடப்பட்ட 144,000 பேர்களும் எண்ணவியலாத பெருந்திரளான கூட்டமும் சூழ்ந்திருக்கும் காட்சி.[1]*

*நாள்வரிசை முறையில் அதிகாரம் 6ஐத் தொடர்ந்து அதிகாரம் 7 வருவதில்லை என்று பெரும்பான்மையான விளக்கவுரையாளர்கள்*

ஒப்புக்கொள்கின்றனர், அதாவது நிகழ்ச்சிகளின் நாட்காட்டி ஒன்றை கட்டியமைத்தல் என்பது யோவானின் நோக்கமாக இருந்ததில்லை. அதிகாரம் 7ன் நிகழ்ச்சிகள், ஆறாம் முத்திரை உடைக்கப்படுவதற்கு முன்பு, ஒருவேளை முதலாம் முத்திரை உடைக்கப்படுவதற்கு முன்பேகூட நடந்திருந்தன என்பதற்கு நாம் பல குறிப்புகளைக் கண்டறிகின்றோம்:

வேதசாட்சியாக மரித்தவர்கள், ஐந்தாம் முத்திரை உடைக்கப்பட்ட போது பழிவாங்குதலுக்காக சத்தமிட்டுக் கூப்பிட்டனர், ஆனால் அவர்களுக்கு நியாயம் செய்யப்படுவதற்கு முன்பு, அவர்கள் "கொஞ்சக் காலம்" காத்திருக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது (6:11). நியாயந்தீர்த்தல் என்பது பிற்பாடு, ஆறாம் முத்திரை உடைக்கப்படும்போது வரும் என்ற உண்மையானது, ("கொஞ்சக் காலம்" என்ற) காலவேளை யானது, ஐந்தாம் மற்றும் ஆறாம் முத்திரைகள் உடைக்கப்பட்ட காட்சி களுக்கிடையில் கடந்தது என்று கருத்துத் தெரிவிக்கிறது. அதிகாரம் 7ன் நிகழ்ச்சிகள் இந்தக் காலவேளைக்குள் பொருந்தியிருக்க முடியும்.

அதிகாரம் 7ன் முதல் பகுதியில், தேவனுடைய ஊழியக்காரர்கள் முத்திரைபோட்டுத் தீருமளவும், "பூமியைச் சேதப்படுத்தாது இருக்கும்படி" தூதர்களுக்குக் கூறப்பட்டது (7:3). இருப்பினும் அதிகாரம் 6ல் சிவப்புக் குதிரையின்மீது ஏறியிருந்தவர் "சமாதானத்தைப் பூமியிலிருந்தெடுத்து" போட்டார் (6:4), மற்றும் மங்கின நிறமுள்ள குதிரையின்மீது ஏறியிருந்த வருக்கு "பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்ட மிருகங்களினாலும், பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலை செய்யும்படியான அதிகாரம் ... கொடுக்கப்பட்டது" (6:8ஆ). நான்கு குதிரைகளின்மீது ஏறியிருந்தவர்களுடன் "பூமிக்குத் தொடங்கிய தீமை" என்பது, அதிகாரம் 7ன் நிகழ்ச்சிகள், குதிரையில் ஏறியிருந்தவர்கள் சவாரி செய்யத் தொடங்குவதற்கு முன்பு நடைபெற்றிருக்கலாம் என்று கருத்துத் தெரிவிக்கிறது.

அதிகாரம் ஏழின் நான்கு காற்றுகள் என்பவை, அதிகாரம் ஆறின் நான்கு குதிரை வீரர்களால் ஏற்படுத்தப்பட்ட அதே இன்னல்களைக் குறிக்கலாம். விஷயம் இதுவாகவே இருந்தது என்று J. W. இராபர்ட்ஸ் அவர்கள் நம்பினார்:

> இந்த (நான்கு) காற்றுகள் என்பவை, முதல் நான்கு முத்திரைகள் உடைக்கப்பட்டபோது வந்த நான்கு குதிரைவீரர்களின் இன்னொரு அடையாளமாக உள்ளன என்பது, இறைவெளிப்பாட்டின் மிகவும் திட்டவட்டமான அடையாளத்துவங்களில் ஒன்றாயிருப்பதாகக் காணப்படுகிறது. இறைவெளிப்பாடு தொடர்ந்து தரவழைக்கும் சகரியாவின் தரிசனத்தில், நான்கு குதிரைவீரர்கள். ஆகாயத்தின் நான்கு காற்றுகள் என்று வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளனர் (சகரியா 6:5).[2]

இராபர்ட்ஸ் அவர்களின் கூற்று சரியானதென்றால், அதிகாரம் 7ல் கிறிஸ்தவர்கள் முத்திரையிடப்படுதல் என்பது நிச்சயமாகவே, முதல் முத்திரை உடைக்கப்படுவதற்கு முன்பாக நடந்தது என்றாகிறது.

*மேற்கண்ட விஷயத்தைக் கவனத்தில் கொண்டு, நாம் இந்தப் பாடத்தில், அதிகாரம் 7ன் நிகழ்ச்சிகளை அதிகாரம் 6ல் சித்தரிக்கப்பட்ட பயம்நிறைந்த நிகழ்ச்சிகளுக்கு முன்னதாக நடைபெற்றன என்ற வகையில் பின்னோக்கித் திரும்பி நினைத்துப் பார்ப்போம்.[3]*

*இது, "விஷயம் அப்படியுள்ளதென்றால், அதிகாரம் 7ன் நிகழ்ச்சிகள் இந்த விபரத்தின் முற்பகுதியில் உட்செருகப்படாதது ஏன்?'' என்ற கேள்வியைத் தூண்டுகிறது. சாத்தியக்கூறுள்ள பல காரணங்கள் தரப்படலாம்: ஒருவேளை இந்தக் கருத்துகள், ஒரு நாடகத்துவமான செயல்விளைவைக் கொண்டுவரும் வகையில் அமைக்கப்பட்டிருக்கலாம். அதிகாரம் 6ஐ, தரம்வாய்ந்த இசைப்பத்தி ஒன்றில் பலவந்தமாக நுழைக்கப்பட்ட படிப்படியாக அதிகரிக்கும் இசையுடன் ஒப்பிடலாம். பின்பு, நமது புலன்கள் இனியும் தாங்க இயலாது என்று காணப்படும்போது, இதமான பத்தியொன்று நமது காதுகளை வருடி வாழ்த்துகிறது - இது அதிகாரம் 7ல் மீண்டும் கட்டியெழுப்பப்படும் இறுக்கத்திற்கு முன்னதாக ஆத்துமாவை அமைதிப்படுத்தும் வர்ணமெட்டாக, அமைதிப்படுத்தும் இடையிசையாக உள்ளது.*

*அதிகாரம் 6ன் விளைவாக எழுந்த கேள்விக்கு அதிகாரம் 7 பதில் அளிக்கிறது என்பது அதிகம் நம்பக்கூடிய விளக்கமாக இருக்கிறது. அதிகாரம் 6ல் சித்தரிக்கப்பட்டுள்ள துன்பத்திற்குப் பின்பு - விசேஷமாக, இந்த அண்டத்தின் அளவையியல் ரீதியான (அடையாளத்துவ) அழிவிற்குப் பின்பு - ''ஆனால், கிறிஸ்தவர்களைப் பற்றிய விஷயம் என்ன? இவை நடக்கும்போது எங்களுக்கு என்ன நேரிடும்?'' என்பதே யோவானின் வாசகர்களினுடைய இயல்பான பதில் செயலாய் இருந்திருக்கும். அதிகாரம் 7 இதற்கான பதிலைத் தருகிறது.*

*அதிகாரம் ஏழில் இரண்டு காட்சிகள் சித்தரிக்கப்படுகின்றன: 144,000 பேர் முத்திரையிடப்படுதல் (வசனங்கள் 1-8) மற்றும் அரியணையைச் சுற்றிலும், ஒருவராலும் எண்ணிக்கணக்கிட முடியாத பெருந்திரளானவர்கள் சூழ்ந்திருத்தல் (வசனங்கள் 9-17). நாம் இந்தப் பாடத்தில் 144,000 பேர்களைப் பற்றியும் அடுத்த பாடத்தில் பெருந்திரளானவர்களைப் பற்றியும் கலந்துரையாடுவோம்.*

## தேவன் அளிப்பின் வார்த்தையைக் கொண்டுள்ளார்: அவர் தமக்குச் சொந்தமானவர்களை ஆதரிக்கின்றார் (7:1-3)

*அதிகாரம் 7, "இவைகளுக்குப்பின்பு ..." என்று தொடங்குகிறது (வசனம் 1அ). "இவைகளுக்குப் பின்பு" என்பது, வெளிப்படுத்தின விசேஷத்தில் ஒரு புதிய தலைப்பையோ அல்லது சிந்தனையின் புதிய வரியையோ அறிமுகப்படுத்தப் பயன்படுத்தப்பட்டுள்ள ஒரு கிரேக்கச் சொல்விளக்கமாகும்.[4] "இவைகளுக்குப் பின்பு, பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்று, பூமியின்மேலாவது, சமுத்திரத்தின்மேலாவது, ஒரு மரத்தின்மேலாவது, காற்று அடியாதபடிக்கு, பூமியின் நான்கு காற்று*

*களையும் பிடித்திருக்கக்கண்டேன்'' என்று அப்போஸ்தலர் கூறினார் (வசனம் 1). (''நான்கு தூதர்களும் பூமியின் நான்கு காற்றுகளைப் பிடித்திருத்தல்'' என்ற விளக்க படத்தைக் காணவும்.)*

*இந்தப் புத்தகம் முழுவதிலும் நாம், தூதர்கள் தேவனுடைய திட்டங்களைச் செயல்படுத்துவதைக் காண்கின்றோம். இவர்களில் சிலருக்கு விசேஷித்த விதமான பணிப்பொறுப்புகள் தரப்பட்டிருந்தன: ஒருவர் "அக்கினியின்மேல் அதிகாரம்" கொண்டிருந்தார் (14:18), இன்னொருவர் "தண்ணீர்களின் தூதனாக" இருந்தார் (16:5). அதிகாரம் 7ல், "பூமியின் காற்றுகளை"[5] கட்டுப்படுத்துவதற்கு நான்கு தூதர்கள் தேவனால் பயன் படுத்தப்பட்டனர். நான்கு என்பது "வானவியல் எண்ணாக" (படைப்பின் எண்ணாக) உள்ளது என்பதையும், வெளிப்படுத்தின விசேஷத்தில் இது மனிதகுலம் முழுவதையும் குறிக்கிறது என்பதையும் நினைவில் வையுங்கள்.[6]*

*"பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்று" இருந்தனர் (வசனம் 1ஆ): ஒருவர் கிழக்கிலும், மற்றவர்கள் மேற்கிலும், வடக்கிலும் மற்றும் தெற்கிலும் நின்றிருந்தனர். " 'பூமியின் நான்கு திசைகள்' என்ற சொற் றொடரை இவ்விடத்தில் அறிவிப்பதில் நாம், இது ஏசாயா 11:12[7] அல்லது அன்றாட செய்தித்தாள் ஆகியவற்றில் இருப்பதைக் காட்டிலும் அதிகம் 'விஞ்ஞானப் பூர்வமற்றதாக' இருப்பதில்லை என்பதைக் கவனிக் வேண்டும்.''[8] ஆபிரகாமுக்கு நீண்டநாட்கள் முன்னதாகவே, ''பூமியின் நான்கு திசைகள்'' என்பது உலகளாவிய தன்மையை மறைமுகமாய்க் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது.[9]*

*இந்த நான்கு தூதர்களும் "பூமியின்மேலாவது, சமுத்திரத்தின் மேலாவது, ஒரு மரத்தின்மேலாவது, காற்று அடியாதபடிக்கு, பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருந்தனர்"[10] (வசனம் 1இ). இந்தக் காற்றுகள் ''பூமியையும் சமுத்திரத்தையும்'' (வசனம் 2ஆ) மற்றும் ''மரங்களையும் சேதப்படுத்துகிறதற்கு'' (வசனம் 3ஆ) நியமிக்கப்பட்டிருந்த அழிவின் முகமைகளாக இருந்தன. வேதவசனங்களில், தேவனுடைய கோபத்திற்கு அடையாளங்கள் என்ற வகையில் கடுங்காற்றுகள் அடிக்கடி பயன்படுத்தப் படுகின்றன;[11] இங்கு அவைகள் பூமியின்மீது கட்டவிழ்த்து விடப்படுவதால் ஏற்படும் பயங்கரங்களை அடையாளப்படுத்துகின்றன. நான்கு திசைகளிலும் இருந்து நான்கு காற்றுகள் வரும் என்ற உண்மையானது "எப்பக்கத்திலும் இடர்ப்பாடு" என்ற சிந்தனையை அடிக்கோடிடுகிறது. நீங்கள் இந்தக் காட்சியை உங்கள் மனதில் காணுகையில், சுழற்காற்றுகள் கட்டவிழ்க்கப்படுவதற்குக் காட்டு விலங்குகள் தங்கள் கட்டுகளில் வலிந்து துடிப்பதுபோல் போராடுவதைக் கண்ணோக்குங்கள்!*

*பின்பு யோவான், "வேறொரு தூதன் சூரியன் உதிக்குந்திசையிலிருந்து ஏறிவரக்கண்டார்'' (வசனம் 2அ), அதாவது "கிழக்குத் திசையிலிருந்து'' அந்தத்தூதன் வரக்கண்டார். யூதத்துவச் சிந்தனையில், தேவனுடைய கிருபையுள்ள வெளிப்பாடுகள் கிழக்குத் திசையுடன் தொடர்புடையவை களாய் இருந்தன: பரதீசு கிழக்கு திசையில் அமைக்கப்பட்டது (ஆதியாகமம் 2:8), தேவாலயத்திற்குத் தேவனுடைய மகிமை கிழக்கில் இருந்து வந்தது (எசேக்கியேல் 43:2), மற்றும் மேசியா கிழக்கில் இருந்து வருவார் என்று*

எதிர்பார்க்கப்பட்டிருந்தார்.[12] சூரியன் உதிக்கும் திசையில் இருந்து வருதல் என்பது, அந்த தூதர், ஆண்டவரிடத்தில் இருந்து நம்பிக்கையின் செய்தியொன்றைக் கொண்டுவந்தார் என்று சுட்டிக்காண்பித்தது.

இந்தத்தூதர் ''ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக்கோலை''க்[13] கொண்டிருந்தார் (வசனம் 2ஆ). "கிழக்குநாடுகளின் முடியரசர்கள் தங்கள் உடைமைகளை அடையாளப்படுத்திப் பாதுகாப்பதற்கும், சட்டபூர்வமான பதிவேடுகளை செல்லத்தக்கதாக்குவதற்கும் தங்களுக்கென்று விசேஷித்த முத்திரைகளைக் கொண்டிருந்தனர்."[14] பொதுவாக இந்த முத்திரைகள், முத்திரை மோதிரங்களின்மீது இருந்தன (ஆதியாகமம் 41:42; எஸ்தர் 3:10; 8:2 ஆகிய வசனங்களைக் காணவும்), ஆனால் இவைகள் கைப்பிடிகள் கொண்ட உலோக முத்திரைகளாகவும் இருந்திருக்கக்கூடும்.

முத்திரைக்கோலைக் கொண்டிருந்த தூதர், "நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான்'' (வசனம் 3). ''ஊழியக்காரர்'' என்பது வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் தொடக்க வார்த்தைகளில் (1:1) காணப்படும் அதே சொற்றொடராக உள்ளது.[15] இது தேவனுக்குரியவர்கள் எல்லாரையும் குறிக்கிறதாக இருக்கும் வேளையில், விசேஷமாக அந்த வேளையில் உபத்திரவப்படுத்தப்பட்டிருந்த கிறிஸ்தவர்களை அர்த்தப்படுத்திற்று.

தேவன் தமது மக்களைப் பற்றி அக்கறை கொண்டிருந்தார். உண்மையில் அவர், ''எனது பிள்ளைகள் ஆயத்தமாகும் வரையிலும் பயங்கரங்களைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருங்கள்!"[16] என்று கூறினார். தேவன் தமக்குச் சொந்தமானவர்களிடத்தில் பட்சபாதமாய் இருக்கின்றார் என்பது வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்களில் ஒன்றாக உள்ளது! என்னைத் தவறாக புரிந்துகொள்ளாதீர்கள்; இரட்சிப்பின் விஷயத்தைப் பொறுத்தமட்டில், "தேவன் பட்சபாதமுள்ளவரல்ல" (நடபடிகள் 10:34ஆ, 35; கலாத்தியர் 3:28ஐயும் காணவும்).[17] இருப்பினும் ஒரு நபர், விசுவாசத்திலும் கீழ்ப்படிதலிலும் கர்த்தருக்குப் பதில் அளிக்கின்றபோது, அவர் தேவனுக்குப் பிரியமானவர்களில் ஒருவராகின்றார்![18]

ஆதியாகமம் 6:8ல் நாம், "நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது" என்று வாசிக்கின்றோம். மோசே, சாமுவேல், தாவீது, மரியாள் மற்றும் இயேசு ஆகியோருக்கும் இதே விஷயம் கூறப்பட்டுள்ளது (யாத்திராகமம் 33:12; 1 சாமுவேல் 2:26; நடபடிகள் 7:46; லூக்கா 1:30). ஞானவானாக இருந்த மனிதர், "நல்லவன் கர்த்தரிடத்தில் தயைபெறுவான்" என்று உரைத்தார் (நீதிமொழிகள் 12:2அ), மற்றும் சங்கீதக்காரர், "தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்" என்று எழுதினார் (சங்கீதம் 147:11அ). குறிப்பாக ஏற்புடைய வசனப்பகுதியொன்று 1 பேதுரு 2:20ஆ வில் காணப்படுகிறது: "நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்குமுன்பாகப் பிரீதியாயிருக்கும்!"[19]

நீங்கள் கிறிஸ்தவராகும்போது, நீங்கள் தேவனுக்கு விசேஷித்தவரா

*கின்றீர்கள்*[20] *- உங்கள் வாழ்வில் ஊடுருவும் பிரச்சனைகள் உங்களைக் குறைவாக விசேஷித்தவர்களாக்கி விடுவதில்லை. உண்மையில், நீங்கள் அந்தப் பிரச்சனைகளை விசுவாசத்துடன் சந்திக்கும்போது, கர்த்தருக்கு நீங்கள் இன்னும் அதிகமாக விசேஷித்தவர்கள் (அப்படிப்பட்டது சாத்தியமென்றால்) ஆகின்றீர்கள்!*

## தேவன் பாதுகாப்பின் முத்திரையைக் கொண்டுள்ளார்: அவர் தமக்குச் சொந்தமானவர்களைப் பராமரிக்கின்றார் *(7:2-4)*

*தேவன் தமக்குப் பிரியமானவர்களுக்கு என்ன செய்கின்றார்? பின்தொடரும் பதிலைக் கவனமாக வாசியுங்கள், ஏனெனில் இது நமது பாடத்தின் முதன்மைச் செய்தியாக உள்ளது.*

*"முத்திரை" என்பது இவ்வசனப் பகுதியின் திறவுகோல் வார்த்தையாக உள்ளது: கிழக்கில் இருந்து வந்த தூதர், "ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக்கோலை"க் கொண்டிருந்தார் (வசனம் 2). அவர், "நான்கு தூதரையும் நோக்கி: நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான்" (வசனங்கள் 2ஆ, 3). ("தேவனுடைய ஊழியக்காரர்மீது ஒரு தூதன் முத்திரை இடுதல்" என்ற விளக்க படத்தைக் காணவும்.) நாம், "இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரைபோடப்பட்டவர்கள் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர்" என்று வாசிக்கின்றோம் (வசனம் 4). இஸ்ரவேலின் பன்னிரு கோத்திரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன, ஒவ்வொரு கோத்திரத்திலும் "பன்னீராயிரம் பேர்" முத்திரை போடப்பட்டனர் (7:5-8).*

*அதிகாரம் 5ல் ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்ட புத்தகச்சுருளைப் பற்றிப் படித்தபோது நாம், முத்திரையொன்றின் முக்கியத்துவத்தைக் கவனித்திருந்தோம். முத்திரை என்பது மூன்று மடங்கு நோக்கம் கொண்டிருந்தது என்று நாம் வலியுறுத்தினோம்:*

*(1) உரிமைத்துவத்தைச் சரிபார்த்தல் (உன்னதப்பாட்டு 8:6),*

*(2) உண்மைத் தன்மையை உறுதிசெய்தல் (எஸ்றா 3:12), மற்றும்*

*(3) உள்ளிருப்பவற்றைப் பாதுகாத்தல் (மத்தேயு 27:66).*

*வெளிப்படுத்தின விசேஷம் 7ல் உள்ள "ஜீவனுள்ள தேவனுடைய முத்திரை" என்பது, இந்த மூன்று நோக்கங்களுக்கும் பயன்பட்டது. அது, ஊழியக்காரர்கள் தேவனுக்கு உரியவர்கள் என்று காண்பித்தது. தேவனுடைய ஊழியக்காரர்களைத் தவிர வேறெவரும் முத்திரை இடப்படவில்லை; இவ்விதமாக, முத்திரையானது உண்மைத் தன்மையைச் சுட்டிக் காண்பித்தது. இருப்பினும், பாதுகாப்பு என்பதே வெளிப்படுத்தின விசேஷம் 7ன் வலியுறுத்தமாக உள்ளது; வரவிருந்த பெருந்துன்பங்களில் இருந்து ஊழியக்காரர்களைப் பாதுகாப்பதற்காக அவர்கள்மீது*

முத்திரையிடப்பட்டது.[21] அவர்கள் இவ்வாறு பாதுகாக்கப்பட்டனர் என்பது வெளிப்படுத்தின விசேஷம் 9ல் காணப்படமுடியும், அங்கு பாதாளக்குழியில் இருந்து புறப்பட்டு வந்த வெட்டுக்கிளிகளுக்கு, "தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைத் தரித்திராத மனுஷரைமாத்திரம் சேதப்படுத்த அவைகளுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது" (9:4).

இதற்கான பழைய ஏற்பாட்டு இணைவு ஒன்று எசேக்கியேல் 9:2-6ல் கண்டறியப்பட முடியும்: தேவபக்தியற்றவர்களைத் தண்டிப்பதற்காகத் தேவன் எருசலேமுக்கு, கொலைத்தண்டனை நிறைவேற்றும் ஆறுபேரை அனுப்பினார். இந்த ஆறுபேருடன், ''கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருக்கிற'' (வசனம் 2) இன்னொரு மனிதரும் சென்றார். இந்த மனிதருக்கு, "நீ எருசலேம் நகரம் எங்கும் உருவப்போய், அதற்குள்ளே செய்யப்படுகிற சகல அருவருப்புகளினிமித்தமும் பெருமூச்சுவிட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில் அடையாளம் போடு" என்று கூறப்பட்டது (வசனம் 4). இவர் ஒரு தனிப்பட்ட அடையாளத்தைக் கொண்டு ஒன்றுமறியாத வர்களை அடையாளப்படுத்த வேண்டியிருந்தது. அதன்பின்பு, கொலைத்தண்டனை நிறைவேற்றுபவர்கள் எருசலேம் நகரெங்கும் சென்று, "முதியோரையும், வாலிபரையும், கன்னிகைகளையும், குழந்தைகளையும், ஸ்திரீகளையும்'' இரக்கமின்றிக் கொன்றுபோட்டனர் (வசனம் 6அ). ஆனால், ''அடையாளம் போடப்பட்டிருக்கிற ஒருவனையும் கிட்டாதிருங்கள்'' (வசனம் 6ஆ) என்று தேவன் கட்டளையிட்டார். எசேக்கியேல் கண்ட தரிசனத்தில், அடையாளமானது[22] உண்மை யுள்ளவர்களைப் பாதுகாத்தது போலவே, யோவான் கண்ட தரிசனத்திலும் அடையாளமானது உண்மையுள்ளவர்களைப் பாதுகாத்தது.

மக்களை முத்திரையிடுதல் என்பது உங்களுக்கு வினோதமானதாகக் காணப்படலாம். சாதாரணமாக, பொருட்கள்தான் முத்திரையிடப் பட்டன,[23] ஆனால் இங்கு மக்கள் முத்திரையிடப்பட்டனர். இருப்பினும், ஆவிக்குரிய வகையில் முத்திரையிடப்பட்டிருத்தல் என்பது அன்றைக் கிருந்த கிறிஸ்தவர்களுக்கு நன்கு பழக்கமான கருத்தாக இருந்தது, அது இன்றைய நாட்களிலும் அவ்வாறே இருக்க வேண்டும். ஒரு நபர் ஞானஸ்நானம் பெறுகின்றபோது, அவர் பரிசுத்த ஆவியானவரை வரமாகப் பெறுகின்றார் (நடபடிகள் 2:38; நடபடிகள் 5:32; கலாத்தியர் 4:6ஐயும் காணவும்) - மற்றும் இந்த ஆவிக்குரிய காரியமானது ''முத்திரையிடப் படுதல்'' என்று குறிப்பிடப்படுகிறது. பவுல், ''விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்" என்று எழுதினார் (எபேசியர் 1:13, 14ஆ; எபேசியர் 4:30; 2 கொரிந்தியர் 1:21, 22ஐயும் காணவும்).

பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் பண்ணுகின்றார் என்ற உண்மையானது (1 கொரிந்தியர் 3:16; 2 தீமோத்தேயு 1:14) உரிமைத்து வத்தையும் உண்மைத் தன்மையையும் குறிக்கிறது (ரோமர் 8:9), ஆனால் இது விசேஷமாக, தேவன் தொடர்ந்து அருளிரக்கத்துடன் அளிக்கின்றவற்றைப் பற்றிப் பேசுகிறது (ரோமர் 8:11, 26).[24] முதல் நூற்றாண்டில் இருந்து தற்காலம் வரையில் உள்ள கிறிஸ்தவர்கள், தேவனால்

*முத்திரையிடப்பட்டு - மற்றும் இவ்விதமாகப் பாதுகாக்கப்பட்டு - இருக்கின்றனர்!*

*இது நம்மை நமது பாடத்தின் இருதயம் போன்ற மையப்பகுதிக்குக் கொண்டுவருகிறது: அவர்கள் எந்தக் கருத்தில் பாதுகாக்கப்பட்டு இருந்தனர்? அந்த முத்திரையானது அவர்களின் உடல்களை, அம்பு களாலும், ஈட்டிகளாலும் மற்றும் பட்டயங்களாலும் தாக்க முடியாத வைகள் ஆக்கிற்றா? அந்த முத்திரையானது, அவர்களின் கழுத்துக்களை, கொலைத்தண்டனை நிறைவேற்றுபவர்கள் எம்பிவிழும்படிக்கு மிகவும் விரைப்பாக்கிற்றா? அந்த முத்திரையானது, கொழுந்து விட்டு எரியும் நெருப்பு அவர்களின் உடல்களைப் பட்சித்துப் போடாதபடிக்கு, அவர்கள் வெப்பத்தை உணராத வகையில் அவர்களைத் தீயினால் பாதிக்கப்படாத வர்கள் ஆக்கிற்றா? இந்தக் கேள்வியை இன்னும் நெருங்கிக் கொண்டு வருவதென்றால் அந்த முத்திரையானது இன்றைய நாட்களின் கிறிஸ்தவர் களை, புற்றுநோய் உட்பட, மரணத்திற்கு ஏதுவான நோய்களினால் தாக்கப்பட முடியாதவர்கள் ஆக்குகிறதா? நாம் முத்திரையிடப்பட் டிருத்தல் என்பது, நாம் சாவுக்கேதுவான கார்விபத்து ஒன்றில் அகப்பட இயலாது என்று அர்த்தமாகிறதா? அந்த முத்திரையானது நம்மை நிதிநிலைப் பேரழிவில் இருந்து தாமாகவே பாதுகாக்கிறதா? நம்மில் ஒவ்வொருவரும் வயது முதிர்வது என்பதுடன் இணைந்துள்ள (உடல் அளவில்) தாழ்வு நிலைகளில் இருந்து விலக்கிவைக்கப் படுவோமா? உண்மையுள்ள கிறிஸ்தவர்கள், ஒரு குடும்பம் பிரிந்து சீரழிந்து போவதால் ஏற்படும் இருதய துக்கத்தை அறியாமல் இருப்பார்கள் என்று அர்த்தமா?*

*இந்தக் கேள்விகளுக்கான பதில்களை நாம் ஒவ்வொருவரும் அறிந்துள்ளோம். வாழ்வு கொண்டுவரக்கூடிய எல்லா பிரச்சனைகளுக்கும், அத்துடன் கூடுதலாக, தேவனுடைய பிள்ளைகள் சகிக்க வேண்டியவையாக உள்ள தனிப்பட்ட பிரச்சனைகளுக்கும், கிறிஸ்தவர் உட்பட்டுள்ளார் என்பதை வேதவசனங்களும் மனித அனுபவமும், நமக்குக் கூறுகின்றன.*[25] *இதுவரைக்கும் அதிகாரத்திற்குப் பின் அதிகாரமாக நாம் படித்துள்ள படிப்பில், கிறிஸ்தவர்கள் துன்புறுவதை நாம் கண்டுள்ளோம் (1:9; 2:10, 13; 3:10; 6:4, 6, 8-11). மீண்டுமாக நாம், "முத்திரையானது தேவனுடைய விசேஷித்த மக்களை எந்தக் கருத்தில் பாதுகாக்கிறது?" என்று கேட்கின்றோம்.*

*முத்திரை வைக்கப்பட்ட இடத்தில் இதற்கான பதில் கிடக்கிறது என்று நான் நம்புகின்றேன்: "நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோட்டுத் தீருமளவும் ..." (வசனம் 3; மேலும் 9:4; 14:1; 22:4ஐயும் காணவும்). இது தேவனால் அங்கீகரிக்கப்பட்டவர்கள், தங்கள் நெற்றிகளில் ஒரு தெய்வீக அடையாளச் சின்னத்தைக்*[26] *கொண்டிருந்தனர் என்று அர்த்தப்படுவது இல்லை. மிருகத்தை வணங்கியவர்களுக்கு "தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றி களிலாவது ஒரு முத்திரை" தரப்பட்டிருந்தது என்று பிற்பாடு நாம் வாசிப்போம் (13:16; மேலும் 14:9; 20:4ஐயும் காணவும்).*[27] *விசுவாசிகள் தங்கள் நெற்றிகளில் ஒரு பெரிய வெள்ளை முத்திரையைக் கொண்டிருந்து,*

அவிசுவாசிகள் ஒரு அழகற்ற மஞ்சள் அடையாளக் குறியைக் கொண்டிருந்தால், அது உதவி நிறைந்ததாக இருந்திருக்கும், ஆனால் விஷயம் அப்படியிருக்கவில்லை.

எனவே, "அவர்களின் நெற்றிகளில்" முத்திரையிடப்பட்டது என்ற உண்மையின் முக்கியத்துவம் என்னவாக உள்ளது? இந்த விபரத்தைப் பெரும்பான்மையான விளக்கவுரையாளர்கள் கவனியாது விட்டு விடுகின்றனர். ஒருவேளை யாரேனும் இதைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார் என்றால், அவர்கள் நெற்றியின் மேன்மைத் தன்மையை வலியுறுத்து கின்றனர், அல்லது நெற்றி என்பது முகத்தின் உணர்வை வெளிப்படுத்தும் பாகமாக உள்ளது என்று கூறுகின்றனர். இராபர்ட் முல்ஹாலண்ட் அவர்கள், நெற்றி என்பது "உள்ளுணர்வின் இருக்கையாக உள்ளது"[28] என்று குறிப்பிட்டபோது, அவர் இந்த அடையாளத்துவத்தின் அழுத்தத்தைப் படம்பிடித்துக் காட்டினார் என்று நான் நம்புகின்றேன். நீங்களும் நானும் நமது நெற்றிகளைத் தட்டிக்கொள்ளும்போது, நாம் குறிப்பிடுவது என்ன? நமது சிந்தைகளைத் தானே! தேவனுடைய மக்களின் "நெற்றிகளில்" முத்திரையிடப்படுதல் என்பது, அவர்களின் *சிந்தைகளிலும்* இருதயங் களிலும் தேவன் தமது பாதுகாப்பை வைத்தார் என்று சுட்டிக்காண்பிக்கிறது என்று நான் நம்புகின்றேன்.

*(அன்பான வாசகரே, பின்வரும் கருத்தை உங்கள் மனதில் பதியவைக்க என்னை அனுமதியுங்கள்: பின்வரும் கலந்துரையாடலில் நீங்கள் "உநெத" என்பதைக் காணும் ஒவ்வொரு முறையும், நிறுத்தி உங்களது நெற்றியைத் தட்டிக் கொள்ளுங்கள். இப்போது முந்திய பத்தியைத் திரும்பவும் வாசித்து, சாய்வெழுத்துக்களில் உள்ள வார்த்தை ஒவ்வொன்றிற்குப் பின்பும் உங்கள் நெற்றியைத் தட்டிக்கொள்ளுங்கள், பின்பு கீழே தொடரும் பத்தியைத் தொடர்ந்து வாசியுங்கள்.)*

தேவனுடைய மக்களின் நெற்றியில் முத்திரையிடுதல் மற்றும் மிருகத்தைப் பின்பற்றுபவர்களின் நெற்றிகளிலும் கைகளிலும் அடையாள மிடுதல் என்பது எனக்கு உபாகமம் 6ஐ நினைவூட்டுகிறது. அங்கு இஸ்ரவேல் மக்களுக்கு, "இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது ... அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக, அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது" என்று கூறப்பட்டது (வசனங்கள் 6-8). (உநெத.) யூதர்கள் இந்தக் கட்டளையை நேரடி அர்த்தமாக எடுத்துக்கொண்டு, சிறு பெட்டிகளை - சின்னஞ்சிறு கையெழுத்துப் பிரதிகள் கொண்ட பெட்டிகளை - தங்கள் கைகளிலும் நெற்றிகளிலும் கட்டிக்கொண்டனர்.[29] இருப்பினும் பெரும்பான்மையானவர்கள், "உங்கள் *இருதயத்தில்*" என்பது முக்கியமான சொற்றொடராய் இருந்தது என்பதைப் புரிந்து கொண்டிருந்தனர் - மற்றும் தேவனுடைய வசனத்தை நெற்றிகளிலும் கைகளிலும் "கட்டிக் கொள்ளுதல்" என்பது, வசனம் அவர்களின் இருதயங்களில் இருந்தால், அது அவர்களின் *சிந்தித்தலையும்* (உநெத) அவர்களின் செயல்களையும் கட்டுப்படுத்தும். அதுபோலவே, விசுவாசிகளை முத்திரையிடுதலும், அவிசுவாசிகளின் நெற்றிகளில் அடையாளமிடுதலும், அவர்களுடைய

*சிந்தித்தலின் செயல்முறைகள் (உநெத) பாதிக்கப்பட்டன என்பதைச் சுட்டிக்காண்பித்தது!*

நான் கூற முயற்சி செய்வதைத் தவறாகப் புரிந்து கொள்ளாதிருங்கள். தேவனுடைய வசனத்திற்கு நன்கு பழக்கப்பட்ட எவரும், தேவன் தனிப்பட்ட வகையில் இடையிடுவதாகவும், தமது மக்களின் சார்பாக செயல்துடிப்புடன் இருப்பதாகவும் வாக்களித்துள்ளார் என்பதை அறிகின்றார். அவர் நமக்கு உள்ளான வல்லமைகளைக் கூடுதலாக்குவதாக வாக்குத்தத்தம் செய்துள்ளார் (எபேசியர் 3:20). நமது சோதனைகள் ஒருபோதும் நம்மால் கையாளப்படுவதற்கு அதிகமாய் இருக்க மாட்டாது என்று அவர் வாக்களித்து இருக்கின்றார் (1 கொரிந்தியர் 10:13). சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்படி மேலாதிக்கம் செய்வதாக அவர் வாக்களித்துள்ளார் (ரோமர் 8:28). இருந்தபோதிலும், உயர்த்தப்படுதல் மற்றும் வாழ்வின் பிரச்சனைகளினால் கீழே தாழ்த்தப்படுதல் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள வேறுபாடு என்பது, பெரும்பாலும் *எண்ணப்போக்கைப் (உநெத)* பொறுத்த விஷயமாகவே உள்ளது. இதைப் பின்வருமாறும் கூறலாம்: மேலே பட்டியலிடப்பட்ட வாக்குத்தத்தங்களை விசுவாசிக்கின்ற (உநெத) கிறிஸ்தவர், வாழ்வின் புயல்களில் உயிர்பிழைத்திருக்க முடியும்; இவற்றை விசுவாசிக்காதவர் அதே புயல்களினால் விழுங்கப்பட்டுவிட முடியும்.

எனது கருத்தை விவரிப்பதற்கு, அல்லல்களைப் பற்றிப் பொதுவாகவும், மரணத்தைப் பற்றிக் குறிப்பாகவும் பவுல் கொண்டிருந்த எண்ணப் போக்கை (உநெத) ஆழ்ந்து சிந்தியுங்கள்:

> ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை. எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது. மேலும் காணப்படுகிறவைகளை யல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதி சீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவை களோ நித்தியமானவைகள்.
>
> பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத் திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம் (2 கொரிந்தியர் 4:16-5:1).

இந்த அப்போஸ்தலருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டபோது, அவர் பின்வருமாறு கூறினார்,

> **ஏ**னென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன். நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய

*கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார். எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் (2 தீமோத்தேயு 4:6-8).*

*டொனால்டு பார்ன்ஹவுஸ் என்ற பெயருடைய பிரசங்கியாரின் மனைவி, தமது முப்பதுகளின் வயதில் புற்றுநோயினால் இறந்து போனார், அவர் பல சிறுபிள்ளைகளைத் தமக்குப் பின்விட்டுச் சென்றிருந்தார். சவ அடக்கத்திற்குச் செல்லும் வழியில், பார்ன்ஹவுஸூம் அவரது பிள்ளைகளும், அவர்களின் கார்மீது பெரிய நிழலை இட்ட ஒரு பெரிய வண்டியைக் கடந்து சென்றனர். அவர் தமது மகளிடத்தில், ''நீ அந்த வண்டியினால் நசுக்கப்படுவதையா அல்லது அதன் நிழலினால் மேற்கொள்ளப்படுவதையா, எதைத் தேர்ந்து கொள்வாய்?" என்று கேட்டார். அந்தப்பெண், "நிழலினால் மேற்கொள்ளப்படுவதைத்தான்! ஒரு நிழல் என்பது உங்களைத் துன்புறுத்த முடியாதே" என்று பதில் அளித்தாள். அந்த மனிதர் தலையை அசைத்து, "உன் தாய் மரணத்தினால் நசுக்கப்படவில்லை, ஆனால் மரணத்தின் நிழலினால் மேற்கொள்ளப்பட்டு மாத்திரம் இருக்கின்றாள்'' என்று கூறினார். சவ அடக்கத்தில் அவர், சங்கீதம் 23:4அ வின்மீது உரையாற்றினார்: "நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன், தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்."[30]*

*திரு. பார்ன்ஹவுஸ் அவர்களின் உணர்வுடன் பவுல் அடையாளப் படுத்தப்படலாம். இந்த அப்போஸ்தலர் முத்திரையிடப்பட்டிருந்தார் (உநெத); இவர் பாதுகாக்கப்பட்டிருந்தார் (உநெத). இப்படிப்பட்ட எண்ணப்போக்கைக் (உநெத) கொண்டுள்ள எந்த நபரும் துன்புறுத்தப்பட முடியாது!*

*வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை முழுமையாக, மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 7ல் குறிப்பிடப்பட்டுள்ள முத்திரை யிடப்படுதல் ஆகியவற்றிற்கு இடையில் ஒரு இணைவைக் குறிப்பிடுவதன் மூலம் நான் எனது சிந்தனையை ஒரு அடிவைப்பு முன்னதாகக் கொண்டுசெல்ல விரும்புகின்றேன். (1) வெளிப்படுத்தின விசேஷத்தை யோவான் எழுதிய காலத்தில், மிகமோசமான துன்புறுத்துதல்கள் இனிமேல் வரவேண்டியவைகளாயிருந்தன (உதாரணமாக, 3:10ஐக் காணவும்). இவ்விதமாக, வெளிப்படுத்தின புத்தகமானது, கிறிஸ்தவர்கள் அந்த உபத்திரவங்களினூடே பாதுகாப்பாக வரும்படிக்கு எழுதப்பட்டது (2:10ஐக் காணவும்). (2) வெளிப்படுத்தின விசேஷம் 7ல், கடுமையான காற்றுகள் பூமியின்மீது கட்டவிழ்த்துவிடப்படவிருந்தன. ஆகையால் கிறிஸ்தவர்கள், முன் வந்துகொண்டிருந்த பயங்கரமான நாட்களில் உயிர்பிழைத்து இருக்கும்படிக்கு முத்திரையிடப்பட்டனர். வெளி.புத்தகத்தின் முழுமையும் அதன் நோக்கமானது, முன்வந்து கொண்டிருந்த இடர்ப்பாட்டில் இருந்து தேவனுடைய மக்களை முத்திரையிடுதல்/பாதுகாத்தல் என்பதே நோக்கமாக உள்ளது.*

*யுத்தத்திற்கு அணிவகுத்துள்ள கிறிஸ்தவர்கள், வெளிப்படுத்தின விசேஷத்தின் கொள்கைகளைத் தங்கள் இருதயங்களில் பதித்துக்கொண்டு,[31]*

அவற்றைத் தங்கள் சிந்தித்தல் (உநெத) மற்றும் வாழ்வுகளில் ஒரு பாகமாக்கிக் கொண்டால், அழிவின் காற்று எதுவும் அவர்களை உலுக்கிப்போடாது. வெளிப்படுத்தின புத்தகத்தின் மீதான இந்தப் பாடத்தொடரானது உங்கள்மீது தேவனுடைய "முத்திரையின்" பாகமாய் இருக்கக்கூடும் என்று நான் நம்புகின்றேன். இந்தப் புத்தகம் போதிப்பதைக் கற்றுக்கொண்டு அவற்றை உங்கள் இருதயத்தில் பொக்கிஷமாய்ப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் (உநெத)!

## தேவன், பாதுகாக்கப்பட்டவர்களின் பட்டியலைக் கொண்டுள்ளார்: அவர் தமக்குச் சொந்தமானவர்களை அறிகின்றார் (7:4-8)

அது, இந்தப் பாடத்தை முடிப்பதற்கான மிக உன்னதமான இடமாய் இருக்கும் - ஆனால் நாம், எடுத்துரைத்து முடிக்க இன்னும் ஐந்து வசனங்களையும், கற்றுக்கொள்ள இன்னும் ஒரு பாடத்தையும் கொண்டுள்ளோம். இந்தக் கடைசி ஐந்து வசனங்கள் பலரால், இப்புத்தகத்தில் உள்ள மிகவும் குழப்பமூட்டுபவைகளில் ஒருபகுதியென்று பலரால் ஆழ்ந்து சிந்திக்கப்பட்டுள்ளது:

> முத்திரைபோடப்பட்டவர்களின் தொகையைச் சொல்லக்கேட்டேன்;[32] இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரைபோடப்பட்டவர்கள் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர். யூதா கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். ரூபன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். காத் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். ஆசேர் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். நப்தலி கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். மனாசே கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். சிமியோன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். லேவி கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். இசக்கார் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். செபுலோன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். யோசேப்பு கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். பென்யமீன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம் (வசனங்கள் 4-8).

இவ்வசனப்பகுதியானது யூதர்களை நேரடியான அர்த்தத்தில் குறிக்கிறது என்று சிலர் வலியுறுத்துகின்றனர்.[33] நீங்கள் பின்வருபவற்றைச் செய்தால் இந்த முடிவையே அடைவீர்கள் என்று நான் யூகிக்கின்றேன்-

(1) இஸ்ரவேல் மக்களின் பன்னிரண்டு கோத்திரங்களைப் பற்றி நீங்கள் எதையும் அறியாதிருந்தால்.

(2) கி.மு. 722ல் பத்து கோத்திரங்கள் தங்கள் அடையாளத்தை அடிப்படையாக இழந்து போயின,[34] மற்ற இரண்டும் கி.பி. 70ல்

அவ்வாறாயின்[35] என்பதை நீங்கள் அறியாதிருந்தால்.

(3) தனிப்பட்ட கோத்திரங்கள் இருந்த வேளையிலும், அவைகள் எண்ணிக்கையில் பெரிதும் வேறுபட்டு இருந்தன என்பதை நீங்கள் அறியாதிருந்தால்.[36]

(4) எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது கர்த்தருக்கு இனியும் முக்கியமானதாக இருப்பதில்லை என்ற உண்மையை நீங்கள் அறியாதிருந் தால். பவுல் பின்வருமாறு எழுதினார்: "யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை, எல்லாருக்குங் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரியசம்பன்னராயிருக்கிறார்'' (ரோமர் 10:12); "யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை. அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" (கலாத்தியர் 3:28). பர்ட்டன் காஃப்மென் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:


> யூதர்களை தேவன் என்ன செய்யப்போகின்றார் என்பது பற்றிய பேச்சு யாவும் வீணானதாக, தவறாய் வழிநடத்துவதாக மற்றும் (புதிய ஏற்பாட்டில் உள்ள) யாவற்றிற்கும் நேர்மாறானதாக உள்ளது. இனியும் தேவன், ஈரானியர்களுக்கு, டச்சுக்காரர்களுக்கு, ஆங்கிலேயர் களுக்கு, ஜப்பானியர்களுக்கு வைத்துள்ளதைக் காட்டிலும் அதிக விசேஷித்த திட்டம் ஒன்றை யூத இனத்தவருக்கென்று வைத்திருப்பது இல்லை.[37]

பட்டியலிடப்பட்ட பன்னிரண்டு கோத்திரங்கள், மாம்சப்பிரகாரமான யூதர்களைக் குறிப்பதில்லை என்றால், அவைகள் எதைக் குறிக்கின்றன? வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் பழைய ஏற்பாட்டுச் சொல்லாக்கங்கள் பயன்படுத்தப்படும்போது "திரிபு" இருக்கிறதா என்று கண்ணோக்கும்படி, அறிமுகப் பாடம் ஒன்றில், நான் உங்களுக்குக் கூறினேன். வெளி. 7ல் தரப்பட்டுள்ள கோத்திரங்களின் பட்டியலில், வழக்கத்திற்கு மாறான எதையாவது உங்களால் கண்டறிய முடிகிறதா என்று பாருங்கள்:

> யூதா, ரூபன், காத், ஆசேர், நப்தலி,
> மனாசே,[38] சிமியோன், லேவி, இசக்கார், செபுலோன்,
> யோசேப்பு, பென்யமீன்.

இந்தப் பட்டியலில் யூதா கோத்திரத்தை முதலில் குறிப்பிடுதல் என்பது வினோதமானதாக உள்ளது - இது பொதுவாக, முதல் பிறந்தவரான ரூபனுக்கு ஒதுக்கப்பட்ட இடமாக உள்ளது.[39] லேவியும் யோசேப்பும் உள்ளடக்கப் பட்டு, எப்பிராயீமும் தாணும் சேர்க்கப்படாததென்பது மிகவும் வழக்கத்திற்கு மாறானதாக உள்ளது. லேவி என்பவர் யாக்கோபுவின் குமாரர்களில் ஒருவராயிருந்தார், ஆனால் அவருடைய சந்ததியார்கள் "ஆசாரியத்துவக் கோத்திரமாய்'' இருந்தனர், அவர்கள் பொதுவாகப் பன்னிரண்டு கோத்திரங்களின் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை (எண்ணாகமம் 18:20-24; யோசுவா 13:14ஐக் காணவும்). கோத்திரங்களின்

எண்ணிக்கையைப் பன்னிரண்டு என்று ஆக்குவதற்காக, யோசேப்பின் இரண்டு மகன்களான எப்பிராயீமும் மனாசேயும் இரண்டு கோத்திரங்களாக உள்ளடக்கப்பட்டனர்.




*ஆசாரியத்துவக் கோத்திரம் என்ற வகையில், லேவியின் சந்ததியார்களுக்கு, மற்ற கோத்திரங்கள் பெற்றுக்கொண்ட காணியாட்சி சுதந்திரவகை தரப்படவில்லை.

இருப்பினும் வெளிப்படுத்தின விசேஷம் 7ன் பட்டியலில், லேவி கோத்திரம் உள்ளடக்கப்பட்டது - அதே வேளையில் யாக்கோபுவின் இன்னொரு மகனான தாண் என்பவரின் கோத்திரம் விட்டு விடப்பட்டுள்ளது. மற்றும், எப்பிராயீமுக்குப் பதிலாக யோசேப்பு பட்டியலில் இடப்பட்டுள்ளார்.[40] குறிப்பிடத்தக்க இந்த "திரிபுகள்," இவ்வசனப் பகுதியானது நேரடி அர்த்தத்தில் யூதர்களைக் குறிப்பிடு வதில்லை என்று நம்மை அறியும்படி அனுமதிக்கிற தெய்வீகத் தந்தியாக உள்ளன.[41]

என்றால் இவ்வேத வசனப்பகுதி எதைத்தான் குறிக்கிறது? வசனங்கள் 1முதல் 3வரையிலான நமது படிப்பில் நாம், இவ்வசனப்பகுதியானது கிறிஸ்தவர்களை முத்திரையிடுதல் குறித்துப் பேசுகிறது என்று வலியுறுத் தினோம். வசனம் 3ல் "ஊழியக்காரர்" என்பது 1:1ல் அர்த்தப்படுத்தியது போலவே அர்த்தப்படுத்துகிறது. யூதர்களோ புறஜாதியாரோ, யாராயிருப் பினும், உபத்திரவப்பட்ட கிறிஸ்தவர்களை ஆறுதல்படுத்துதல் என்பதே வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் நோக்கமாக உள்ளது.[42]

இது இன்னொரு கேள்வியை எழுப்புகிறது: வசனம் 4முதல் 8வரை யுள்ள பகுதியானது கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது என்றால், இவ்வசனப் பகுதியானது யூதத்துவக் கோத்திரங்களின் அடையாளத்துவத்தைப்

பயன்படுத்துவது ஏன்?

(1) இந்த அடையாளத்துவமானது வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் முழுவதிலும் கிறிஸ்தவக் கருத்துக்களையும் கோட்பாடுகளையும் குறிப்பதற்கு யூதத்துவச் சொல்லாக்கத்தின் பயன்பாட்டுடன் இணக்கம் கொண்டுள்ளது.

(2) இந்த அடையாளத்துவம், சபை என்பது ஆவிக்குரிய இஸ்ரவேலாக உள்ளது என்ற புதிய ஏற்பாட்டுப் போதனையுடன் இணக்கம் கொண்டுள்ளது. வெளிப்படுத்தின விசேஷம் 2 மற்றும் 3ம் அதிகாரங்கள், "தங்களை யூதரென்று சொல்லியும் யூதராயிராமல்'' போனவர்களைப் பற்றிப் பேசுகிறது (2:9; 3:9ஐயும் காணவும்). அந்த வசனப்பகுதிகளை நாம் படிக்கும்போது, இவர்கள் இயேசுவை மேசியா என்று ஏற்றுக்கொள்ள மறுத்திருந்த மாம்சப்பிரகாரமான யூதர்களாய் இருந்தனர் என்று நாம் வலியுறுத்தினோம்.[43] இதனுடன் தொடர்புடைய வகையில், ரோமர் 2:28, 29 மேற்கோள் காண்பிக்கப்பட்டது: "ஆதலால் புறம்பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல. உள்ளத்திலே யூதனானவனே யூதன், எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம், ..."

யூதர்கள் "ஆபிரகாமின் சந்ததியார்களாய்" இருப்பதினால் மாத்திரம், இனியும் அவர்கள் தேவனுடைய விசேஷித்த மக்களாக இருப்பதில்லை (ரோமர் 9:7; மேலும் வசனம் 6ஐயும் காணவும்). மாறாக, இப்போது ஆபிரகாம் ''விசுவாசிக்கின்ற யாவருக்கும் தகப்பனாக'' இருக்கின்றார் (ரோமர் 4:11; மேலும் கலாத்தியர் 3:7, 29ஐயும் காணவும்). இன்றைய நாட்களில் சபையானது, ''தேவனுடைய இஸ்ரவேல்'' என்று அழைக்கப்படுகிறது (கலாத்தியர் 6:16). "மாம்சத்தின்மேல் நம்பிக்கை யாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மைபாராட்டுகிற'' மக்களே உண்மையான "விருத்தசேதனமுள்ளவர்கள்" (பிலிப்பியர் 3:3).

(3) இந்த அடையாளத்துவமானது, இஸ்ரவேலுக்குத் தேவன் கொண்டிருந்த தோற்றகாலத் திட்டத்தை சபை நிறைவேற்றுகிறது என்ற உண்மையுடன் சீர்பொருந்தியுள்ளது. இஸ்ரவேலைக் குறிப்பதற்கு பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட சொற்றொடர்கள், இப்போது சபைக்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றன: சபை "தேவனுக்குச் சொந்தமானதாக" உள்ளது (எபேசியர் 1:14; மேலும் தீத்து 2:14ஐயும் காணவும்) மற்றும் அது தேவனுடைய "பரிசுத்த இனமாக (ஜாதியாக)" உள்ளது (1 பேதுரு 2:9).

பன்னிரண்டு கோத்திரங்களை, சபை என்று அடையாளப்படுத்துதல், எல்லா சிரமத்தையும் தீர்த்துவைப்பதில்லை. இன்னமும் நாம், "இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர்" (வசனம் 4) என்ற எண்ணிக்கையைக் குறித்துத் திகைப்புடையவர்களாகவே/குழப்பம் கொண்டவர்களாகவே இருக்கின்றோம். சிலர், இந்த எண்ணை நேரடி அர்த்தமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.[44] சிலரைப் பொறுத்தமட்டில், 144,000 பேர் என்பவர்கள் பரலோகத்தில் பிரவேசிக்க அனுமதிக்கப்படும்

"உயர்நிலைப் பரிசுத்தவான்களாய்" இருக்க, நம்மில் எஞ்சியுள்ளவர்கள் - அதாவது, "சாதாரண" பரிசுத்தவான்கள் - புதுப்பிக்கப்பட்ட பூமியுடன் மனநிறைவு கொண்டிருக்க வேண்டும்.[45]

இப்போது நீங்கள், இப்படிப்பட்ட போதனையினால் அலைவுபடாத படிக்கு, வெளிப்படுத்தின விசேஷத்தில் எண்களின் அடையாளத்துவப் பயன்பாடு பற்றிப் போதிய அளவு அறிந்திருக்க வேண்டும்.[46] "பன்னிரண்டு" என்பது முழுமைத்துவத்தின் அடையாளமாக உள்ளது, எனவே "144" (பன்னிரண்டு முறை பன்னிரண்டு) என்பது "முழுமைத்துவத்தின் முழுமைத்துவமாக" இருக்கிறது. "ஆயிரம்" என்பது முழுமைத்துவத்தின் இன்னொரு அடையாளமாக இருப்பதால், "144,000" (144 x 1,000) என்பது "வலிவாக்கப்பட்ட முழுமைத்துவம்" என்பதைக் குறிக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், "அங்கு அவ்வளவுதான்; இனி அதிகம் ஒன்றுமில்லை!" என்றாகிறது.

என்றால், "144,000" என்ற எண்ணின் பயன்பாட்டில் இருந்து நாம் கற்க வேண்டியிருப்பது என்ன? பாடமானது பின்வருவதாக மாத்திரம் இருக்கிறது: தேவனுடைய மக்கள் *அனைவரும்* முத்திரையிடப்பட்டனர். கர்த்தர், தமது பிள்ளைகளின்மீது அங்கீகாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றிற்கான தமது முத்திரையை இடுவதை முடித்தபோது, அவர் (தமது பிள்ளையாக உள்ள) எந்த ஒரு தனிநபரையும் தவறவிட்டுவிட வில்லை; அவர் எல்லாரையும் முத்திரையிட்டார்! இந்த சத்தியத்தை நாம் இன்னும் அதிகமான அளவுக்குத் தனிநபருக்கு உரியதாக்குவோம்: நீங்கள் இராஜாவுடைய ஒரு பிள்ளையாக இருந்தால், நீங்கள் கவனிக்காமல் விட்டுவிடப்படவில்லை. நீங்கள் முத்திரையிடப்பட்டு இருக்கின்றீர்கள்!

எவரொருவரையும் தேவன் தவறவிடுவதில்லை என்ற உண்மையானது, தேவன் தமது மக்களை *அறிகின்றார்* என்பதை மறைமுகமாய் உணர்த்து கிறது. இது, முத்திரையிடப்படுதலின் அடையாளத்துவத்தில் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பிரதானமான சத்தியமாக உள்ளது என்பதை, அதிகாரம் 14 தெளிவாக்கும். அதிகாரம் 14ல், 144,000 பேர், சீயோன் மலையில் ஆட்டுக்குட்டியானவருடன் "அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்ட"வர்களாய் நிற்கின்றார்கள் (14:1ஆ). நான், எனது பெயர் முத்திரையை முகப்பில் கொண்ட வேதாகமம் ஒன்றை வைத்துள்ளேன் - அது, அந்தப்புத்தகம் வேறு யாருடையதும் அல்ல, என்னுடையது என்பதை நிலைநாட்டுகிறது.

நாம் அதிகாரம் 14ஐப் படிக்கும்போது இந்த சிந்தனையை இன்னும் விபரமாய் ஆராய்வோம். இந்த கணத்திற்கு நான் இக்கருத்தைத் தொகுத்துரைப்பதற்கு 2 தீமோத்தேயு 2:19அ வைப் பயன்படுத்த விரும்புகின்றேன்: "ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது. *கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்.*" நீங்கள் தேவனு டைய பிள்ளையாய் இருந்தால், அவர் உங்களை அறிகின்றார் (நாகூம் 1:7; யோவான் 10:14ஐக் காணவும்): அவர் உங்களின் உள்ளும் புறம்பும் அறிகின்றார். அவர் உங்கள் பலங்களையும் பலவீனங்களையும் அறிகின்றார். அவரிடத்தில் நீங்கள் கேட்பதற்கு முன்பாகவே, அவர் உங்கள் தேவைகளை

*அறிகின்றார் (மத்தேயு 6:8). உங்கள் தலையில் எத்தனை முடிகள் உள்ளன என்றுகூட அறிந்திருக்கும் அளவு அவர் உங்களை மிகவும் நெருக்கமாக அறிகின்றார் (மத்தேயு 10:30)!*

*நீங்கள் கர்த்தருக்கு விசேஷித்தவர்கள் என்று நான் மீண்டும் கூறுகின்றேன்!*

## *முடிவுரை*

*மீண்டுமாக வசனம் 1முதல் 8வரை (சிறப்பாக, வசனங்கள் 1முதல் 3வரை) வாசித்துப் பாருங்கள். இந்த வசனப்பகுதி உங்களிடத்தில் விட்டுச் செல்லுகிற முழுமையான மனப்பதிவு என்ன? தேவன் தமது ஊழியக்காரர்களைப் பற்றி அக்கறையாய் இருப்பதில்லையா? அதாவது அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறதில்லையா? உலகில் நான் வாழும் பகுதியில் நாங்கள் சிலவேளைகளில், ''அடையாளமிடப்படுதல், முத்திரையிடப்படுதல், வழங்கப்படுதல்''* ["signed, sealed, and delivered"[47]] *என்ற சொற்றொடரைப் பயன்படுத்துவதுண்டு. நாம் இந்தப் பாடத்தில், தேவன் கிறிஸ்தவர்களுடன் இருக்கின்றார் மற்றும் அவர்களைப் பாதுகாப்பார் என்பதன் அடையாளமாக அவர்கள் முத்திரையிடப்பட்டனர் என்று கண்டோம். நாம் நமது அடுத்த பாடத்தில், கிறிஸ்தவர்கள் அதன் விளைவு என்ற வகையில் விடுவிக்கப் படுவார்கள் என்று காண்போம்.*

*இந்தப் பாடத்தை முடிக்கையில் நான், "நீங்கள் முத்திரையிடப்பட்டு இருக்கின்றீர்களா?" என்று கேட்டாக வேண்டும். நாம் நமது பாடத்தில், மக்கள் பாவங்களில் இருந்து மீட்கப்படுவதற்காக ஞானஸ்நானம் பெறும்போது (முழுக்காட்டப்படும்போது), அவர்களுக்குத் தேவன் தமது சொந்த ஆவியை ஒரு வரமாகத் தருகின்றார் என்று கவனித்தோம் (நடபடிகள் 2:38) - மற்றும் இந்த மாறுதல் ஒரு தெய்வீக முத்திரையிடுதலாகக் குறிப்பிடப்படுகிறது (எபேசியர் 1:13, 14). புதிய ஏற்பாடு போதிக்கிறபடி நீங்கள் ஞானஸ்நானம் பெறாதிருந்தால், நீங்கள் முத்திரையிடப்படவில்லை; உங்களுக்குத் தேவனுடைய பாதுகாப்பு வாக்குத்தத்தம் செய்யப்படவில்லை.*

*ஒரு புயல் பற்றிய விவரிப்பைக் கொண்டு நான் இந்தப் பாடத்தைத் தொடங்கினேன். நீங்கள் அனேகமாக, உலகப்பிரகாரமான மற்றும் உலகப்பிரகாரமற்ற பல புயல்களில் இருந்திருக்கலாம். வாழ்வின் புயல்கள் கடுமையானவை என்று உங்களை நான் இணங்கச் செய்யத் தேவையில்லை. தேவனுடைய முத்திரையைக் கொண்டிருத்தல் என்பதே இதைச் சமாளிப்பதற்கான ஒரே வழியாக இருக்கிறது என்று நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் புதிய ஏற்பாட்டு மாதிரியின்படியாக இன்னமும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளாது இருந்தால், இப்போதே அதைப் பெற்றுக்கொள்ளும்படி நான் உங்களை வற்புறுத்த அனுமதியுங்கள். காத்திருக்காதீர்கள்; தயங்காதீர்கள்!*[48]

குறிப்புகள்

[1]ஆறு மற்றும் ஏழு ஆகிய எக்காளங்களுக்கு இடையில் நாம் இதே வகையான இடையிசையைக் கொண்டிருப்போம். [2]J. W. Roberts, *The Revelation to John (The Apocalypse)*, The Living Word Commentary Series (Austin, Tex.: Sweet Publishing Co., 1974), 70. [3]*அதிகாரம் 7ல் உள்ள இந்தக் காற்றுகள், ஏழு முத்திரைகள் - குறிப்பாக ஏழு எக்காளங்கள் ஆகியவற்றிற்கு - சித்தரிக்கப்பட்டுள்ளவற்றுடன் கூடுதலாக உள்ள புயல்களைக் குறிக்கிறது என்று சிலர் நினைக்கின்றனர் மற்றும் இது சாத்தியமானதாகவே உள்ளது. ஏழு முத்திரைகளும் ஏழு எக்காளங்களும் (நாம் காணப்போகின்றபடி) அடிப்படையில் இணைவாகவும் ஒரே காலகட்டத்தைப் பற்றி எடுத்துரைப்பவைகளாகவும் இருப்பதால், காற்றுகளை முத்திரைகள் அல்லது எக்காளங்களுடன் தொடர்புடைய வகையில் நாம் நினைக்கின்றோமா இல்லையா என்பது சார்பு நிலையில் முக்கியத்துவம் அற்றதாக உள்ளது. கிறிஸ்தவர்களின் வழியில் எப்பொழுது என்னவிதமான உபத்திரவம் வந்தாலும், அவர்களைத் தேவன் பாதுகாக்கின்றார்!* [4]W. B. West, Jr., *Revelation Through First Century Glasses,* ed. Bob Prichard (Nashville: Gospel Advocate Co., 1997), 69. [5]*இவர்கள் துன்மார்க்க சக்திகளை அடக்குகின்ற காவல் தூதர்களாய் இருக்கவில்லை. மாறாக இவர்கள் தேவனுடைய ஆணையைச் செய்த அவரது ஊழியக்காரர்களாய் இருந்தனர்.* [6]*"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் தொடங்குகிற "இங்கே வலுசர்ப்பங்கள் உள்ளன!" என்ற பாடத்தைக் காணவும்.* [7]*"பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து" சிதறியிருந்தவர்களை ஒன்றுகூட்டுதல் பற்றி ஏசாயா பேசியபோது (ஏசாயா 11:12), அவர்* "from everywhere" [*"எங்குமுள்ள"*] *என்று மாத்திரம் அர்த்தப்படுத்தினார் (ஏசாயா 11:11ஐக் காணவும்). எசேக்கியேல் 7:2 இன்னொரு விவரிப்பாக உள்ளது, அவ்விடத்தில் எசேக்கியேல், "*[*பலஸ்தீன*] *தேசத்தின் நாலு முனைகளின்மேலும்" என்பது பற்றிப் பேசினார். பலஸ்தீன நாடு வடிவத்தில் ஒரு சதுரமாக அல்லது நீண்ட சதுரமாக இருந்தது என்று தீர்க்கதரிசி நம்பியதற்காக அவரை எவரொருவரும் குற்றம்சாட்டமாட்டார்கள் என்பது உறுதி.* [8]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary*, vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 590. [9]H. L. Ellison, Scripture Union Bible Study Book Series: *1 Peter - Revelation* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1969), 57. [10]*மரங்களை இதில் உள்ளடக்கியிருத்தல் என்பது வழக்கத்திற்கு மாறானதாக உள்ளது. ஒருவேளை இது, எல்லாத் தாவர வாழ்வைப் பற்றிக் குறிப்பதாக மாத்திரம் இருக்கலாம், அல்லது புயலுக்குப் பின்பு ஒரு பலத்த காற்றினால் மரங்கள் விழுந்து கிடப்பது, மிகவும் மனதில் பதியக்கூடிய காட்சியாக இருப்பதால் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கலாம். 8:7 மற்றும் 9:4 ஆகிய வசனங்களில் மரங்களும் மற்றும் வளருகின்ற பிறவும் மீண்டும் குறிப்பிடப்படும்.*

[11]*எடுத்துக்காட்டாக, எரேமியா 4:11, 12; 23:19; 49:36 மற்றும் 51:1 ஆகிய வசனங்களைக் காணவும். கடுங்காற்றுகள் வீசாத, சமச்சீரான தட்பவெப்பநிலை கொண்ட இடத்தில் நீங்கள் வாழ்ந்தால், இந்தக் கற்பனையானது உங்களுக்குச் சிறிதளவே அர்த்தப்படும். பலத்த காற்று ஒன்றின் கடும் சீற்றத்தின்கீழ் தங்களின் வீடுகள் நடுநடுங்கி வீழ்ந்திருப்பதைக் கொண்டவர்கள், இந்த அடையாளத்துவத்தை எவ்வாறு தழுவுவது என்பதைப் புரிந்து கொள்வார்கள்.* [12]This sentence was adapted from G. R. Beasley-Murray, *The Book of Revelation,* New Century Bible Commentary Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1974), 142. *ஆசரிப்புக்கூடாரமும் தேவாலயமும் கிழக்கு நோக்கியிருந்தன என்பதையும் வேதாகம மாணவர்கள் நினைவுகூருவார்கள்.* [13]*புறதெய்வ வணக்கத்தார்களால் ஆராதிக்கப்பட்ட செத்த உருவங்களுக்கு மாறாக, யெகோவா, "ஜீவனுள்ள தேவன்" என்று அழைக்கப்பட்டார்.* [14]Homer Hailey, *Revelation*: *An Introduction and Commen-*

*tary* (Grand Rapids, Mich.: Baker Book House, 1979), 202. இந்தப் புத்தகத்தில் ''ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராயிருக்கின்றார்'' என்ற பாடத்தில் உள்ள முத்திரையிடப்பட்ட பதிவேடுகள் பற்றிய விளக்கங்களைக் காணவும். [15]''ஊழியக்காரர்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையின் அர்த்தத்திற்கு, ''வெளிப்படுத்தின விசேஷம், 1'' என்ற புத்தகத்தில் 1:1க்கான குறிப்புகளைக் காணவும். [16]உண்மையுள்ளவர்கள் தயாராகும் வரையில் வெள்ளப்பெருக்கு வருவதை தடுத்திருந்ததான தேவனுடைய செயல் என்ற ஒத்த நிகழ்ச்சி மனதிற்கு வருகிறது (1 பேதுரு 3:20). [17]நாம் பட்சபாதம் காண்பிக்க வேண்டுமென்று தேவன் விரும்புவதும் இல்லை (யாக்கோபு 2:1-9ஐக் காணவும்). [18]தேவன் ''நம் பட்சத்தில்'' இருக்கின்றார் (ரோமர் 8:31): அவர் நம் பக்கத்தில் இருக்கின்றார்; அவர் நமது ஆதரவில் இருப்பதை முன் செயலுதவி நோக்கமாகக் கொண்டுள்ளார்! [19]தேவனுடைய ஆதரவைப் பெற்றுக்கொள்ளுதல் மீதான மற்ற வசனப்பகுதிகளுக்கு, சங்கீதம் 5:12; 30:5; 44:3; 106:4; நீதிமொழிகள் 3:4; 8:35; 18:22; கலாத்தியர் 1:10 ஆகிய வசனங்களைக் காணவும். [20]''Special'' [''விசேஷித்த''] என்ற சொற்றொடர் KJV & NASB வேதாகமங்களில் ஒருசில முறைகள் மாத்திரமே காணப்படுகிறது (விசேஷமாக, உபாகமம் 7:6ஐ KJV வேதாகமத்தில் காணவும்), ஆனால் ''sanctified'' மற்றும் ''holy'' என்ற வார்த்தைகள் தேவனுக்கு ''விசேஷித்தவர்களாக'' இருத்தல் என்ற கருத்தை உள்ளடக்குகின்றன - மற்றும் அந்தச் சொற்றொடர்கள் பெரும்பாலும் தேவனுடைய மக்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன (1 கொரிந்தியர் 6:11; 2 தீமோத்தேயு 2:21; எபிரேயர் 2:11; 10:10; 1 பேதுரு 1:16; 2:5, 9 ஆகிய வசனங்களைக் காணவும்).

[21]முத்திரையானது கிறிஸ்தவர்களைப் பாதுகாத்தாலும், அவர்கள் இன்னமும் விழுந்துபோய், உண்மையற்றவர்கள் ஆகிவிடக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது என்பது கவனிக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லையென்றால், வெளிப்படுத்தின விசேஷத்தில் உண்மையுடன் நிலைத்திருக்க வேண்டும் என்று புத்திகூறுவதில் கருத்து எதுவும் இருந்திராது (உதாரணமாக, 2:10). [22]வெளிப்படுத்தின விசேஷத்தில் ''முத்திரை'' மற்றும் ''அடையாளம்'' என்பவற்றிற்கு இடையில் ஒரு வேறுபாடு உள்ளது; ''அடையாளம்'' என்ற வார்த்தை எதிர்மறைக் கருத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளது. எசேக்கியேல் புத்தகத்தில், ''அடையாளம்'' என்பது, வெளிப்படுத்தின புத்தகத்தில் ''முத்திரை'' என்ற சொல் பயன்படுத்தப்பட்ட அதே கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. [23]வேதவசனங்களில், பதிவேடுகள் முத்திரையிடப்பட்டன (1 இராஜாக்கள் 21:8), சிங்கங்களின் குகைகள் முத்திரையிடப்பட்டன (தானியேல் 6:17), மற்றும் இயேசுவின் கல்லறை முத்திரையிடப்பட்டது (மத்தேயு 27:66). [24]இது பரிசுத்த ஆவியானவரின் அற்புத வெளிப்பாடாக இருந்தது (மற்றும் இருப்பது) இல்லை. [25]கிறிஸ்தவர்கள் உபத்திரவங்களில் இருந்து பாதுகாக்கப்படுவதில்லை, ஆனால் அவற்றினூடே கடந்து செல்லும்போது பாதுகாக்கப்படுகின்றனர். [26]''அடையாளம்'' ["logo"] என்பது ஒரு பெயராக, அடையாளமாக அல்லது ட்ரேட் மார்க் என்பதாக, சுலபமாகவும் குறிப்பாகப் புரிந்துணருவதற்காகவும் வடிவமைக்கப்பட்டதாக உள்ளது. [27]வெளிப்படுத்தின விசேஷத்தில் ''ஜீவனுள்ள தேவனுடைய முத்திரை'' என்பது ''மிருகத்தின் அடையாளம்'' என்பதற்கு நேர்மாறாக்கப்பட்டுள்ளது (16:2; 19:20). அடையாளம் என்பது ஒரு மனிதரை, ரோமாபுரியின் அக்கிரமச் செய்கையில் இருந்து பாதுகாக்க முடியும், ஆனால் முத்திரை மாத்திரமே ஒரு மனிதரைத் தேவனுடைய கோபத்தில் இருந்து பாதுகாக்க முடியும். [28]M. Robert Mulholland, Jr., *Revelation*: *Holy Living in an Unholy World*, Francis Asbury Press Commentary, gen. ed. M. Robert Mulholland, Jr. (Grand Rapids, Mich.: Francis Asbury Press, 1990), 181. [29]இந்தச் சிறிய

*பெட்டிகளின் உள்ளிருந்த வேதவசனத்தின் சிறு துணுக்குகள்* "phylacteries" *என்று அழைக்கப்பட்டன. மத்தேயு 23:5ல் இந்த நடைமுறையை இயேசு கண்டித்தார்.* [30]This illustration was adapted from Billy Graham, *Approaching Hoofbeats: The Four Horsemen of the Apocalypse* (New York: Avon Books, 1985), 210.

[31]*அந்த சத்தியங்களில் சிலவற்றை நீங்கள் பின்வரும் அடிப்படைக் கொள்கையுடன் மறுகண்ணோட்டமிட விரும்பலாம்: "நாம் தேவனுடைய பக்கமாய் நிலைத்திருந்தால், நாம் வெற்றியடைகின்றோம்!"* [32]*யோவான் தாமே 144,000 பேர்களையும் எண்ணிக் கணக்கிடவில்லை; மாறாக எண்ணிக்கை அவருக்குக் கூறப்பட்டது. இதன் தனிச்சிறப்பு அடுத்த பாடத்தில் சுட்டிக்காண்பிக்கப்படும்.* [33]*இவர்கள் நேரடி அர்த்தத்தில் யூதர்கள் தாம் என்ற இந்த நிலைப்பாட்டை ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்களில் பெரும்பான்மையானவர்களும் (மற்றும் ஒரு சிலரும்), மேற்கொள்கின்றனர். இவர்கள், இந்த 144,000 பேரும் யூதர்கள் என்றும் வசனங்கள் 9முதல் 17வரை உள்ள பகுதியில் குறிப்பிடப்படும் எண்ணமுடியாத பெருந்திரளான மக்கள் கூட்டம் புறஜாதியார் என்றும் பொதுவாக நம்புகின்றனர். நாம் காணப்போகின்றபடி, இவ்விரு குழுக்களிலுமே யூதர், புறஜாதியார் இருவருமே இருந்தனர்.* [34]*கி.மு. 722ல் அசீரியர்கள், இஸ்ரவேலின் வடக்குக் கோத்திரங்களை வெற்றி கொண்டு, இஸ்ரவேல் மக்களில் பலரைப் பிடித்துச் சென்றனர். இது சில பிரிவினரால் பரப்பப்படுகிறதான "இழந்து போகப்பட்ட பத்துக் கோத்திரங்கள்" என்ற கருத்துக்கு நற்சான்று அளிப்பதில்லை. பத்து கோத்திரங்களில் எஞ்சியுள்ளவர்கள் இருந்தார்கள் என்பது, யூதர்கள் அடிமைத்தனத்தில் இருந்து திரும்பியபோது, பன்னிரண்டு கோத்திரங்களாலும் பலிகள் செலுத்தப்பட்டன என்ற உண்மையிலிருந்து தெளிவான கருத்தை நினைப்பூட்டுகிறது (எடுத்துக்காட்டாக, எஸ்றா 6:17ஐக் காணவும்). ஒருவேளை, இந்த எஞ்சியுள்ளவர்கள், இஸ்ரவேல் மக்கள் விக்கிரக ஆராதனைக்குச் சென்றபோது தெற்கில் யூதாவை நோக்கிச் சென்றிருக்கலாம்.* [35]*கி.பி. 70ல், எருசலேம் நகரம், ரோமபப்படைகளால் அழிக்கப்பட்டது, வம்சவழியியல் பதிவேடுகளும் அழிந்து போயின. இன்றைய நாட்களில், எந்த யூதரும் தாம் எந்த கோத்திரத்தில் இருந்து வந்தவர் என்பதை அறிந்திருப்பதில்லை.* [36]*ஒவ்வொரு கோத்திரத்தில் இருந்தும் மிகச்சரியாக 12,000 பேர்கள்தாம் மாற்றப்பட்டிருப்பார்கள் என்பது எவ்வளவு பொருத்தமற்றதாக உள்ளது!* [37]Burton Coffman, *Commentary on Revelation* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1979), 154. [38]*இந்தப் பட்டியலானது பழைய ஏற்பாட்டுப் பட்டியல்களில் இருந்து வேண்டுமென்றே மாற்றம் கொண்டுள்ளது என்பதைப் புரிந்துகொள்ளத் தவறிய நிலையில் சிலர், வசனங்களை மாற்றி அமைப்பது உட்பட, இந்தப் பட்டியலை "திருத்துவதில்" மாபெரும் உண்மையற்ற தன்மையைச் செயல்படுத்துகின்றனர். இந்தப் பட்டியலில் தாண் கோத்திரம் விடப்பட்டுள்ளதால், இந்த இடத்தில் மூலக் கையெழுத்துப்பிரதிகள் "தாண்" கோத்திரத்தைக் கொண்டிருந்தன, ஆனால் பிரதியெடுப்பவர்களில் சிலர் அதை "மன்" என்று ஆக்கிவிட்டனர், பிற்பாடு இது "மனாசே" என்று நீளமாக்கப்பட்டது என்று அவர்கள் யூகித்துள்ளனர். வசனப்பகுதியில் "மேம்படுத்துதல்" என்று அழைக்கப்படும் இச்செயலை ஆதரிக்கக்கூடிய சாட்சியம் எதுவும் இருப்பதில்லை.* [39]*ஆதியாகமம் 35:22-26; எண்ணாகமம் 13:4-15; உபாகமம் 33:6-29 ஆகிய வசனங்களைக் காணவும். இயேசு யூதாகோத்திரத்தில் உதித்தார் என்பதால் இந்தக் கோத்திரம் முதலாவதாக பட்டியலிடப்பட்டது என்று சிலர் நினைக்கின்றனர் (வெளிப்படுத்தின விசேஷம் 5:5).* [40]*இந்தப் பட்டியலில் எப்பிராயீமும் மனாசேயும் விடப்பட்டது ஏன் என்பது பற்றிப் பலரும் யூகம் செய்கின்றனர். மற்ற எந்தக் கோத்திரத்தைக் காட்டிலும் இந்த*

*இருகோத்திரங்களும் விக்கிரக ஆராதனையில் மிக நெருக்கமாக இணைவு கொண்டிருந்தன என்று சிலர் நினைக்கின்றனர். மற்ற எழுத்தாளர்கள், தாண் கோத்திரத்தைப் பற்றி ஆதியாகமம் 49:17ன் அடிப்படையில் அமைந்த பழங்கால ரபீத்துவ மூடநம்பிக்கையைக் குறிப்பிடுகின்றனர். இந்த இரண்டு கோத்திரங்களும் விடப்பட்ட உண்மையின் முக்கியத்துவம் எதுவும் உள்ளதா என்பது பற்றி நாம் எதுவும் அறிவது இல்லை.*

[41]One of the more thorough discussions on this point is found in Ray Summers, *Worthy Is the Lamb* (Nashville: Broadman Press, 1951), 146-51. [42]*144,000 பேர் என்பது வேதசாட்சியாக மரித்த கிறிஸ்தவர்களை மாத்திரமல்ல, ஆனால் கிறிஸ்தவர்களாக உள்ள எவரொருவரையும் குறிக்கிறது. இது, வேத சாட்சியாக மரிப்பதில் ஒரு விசேஷித்த உண்மை நெறி காணப்பட்டது என்று சில கிறிஸ்தவர்கள் நம்பிய காரணத்தினால் குறிப்பிடப்பட வேண்டியதாக உள்ளது. இதைப் பற்றி காஃப்மென் அவர்களின் விளக்கம் கவனிக்கத்தக்கதாக உள்ளது: "வேதசாட்சியாக மரிப்பவருக்கான கிரீடமானது ஒரே ஒரு தீர்மானமான வீரத்துவச் செயலினால் வெற்றிகொள்ளப்படலாம் (மற்றும் அது மகிமையானதாகவே உள்ளது); ஆனால் ஒரு உண்மையான கிறிஸ்தவருக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட எல்லாவித வெறுப்புகளையும் பொறுமையுடன் சகித்திருந்து, வாழ்நாள் முழுவதும் இவ்விதமாக ஜீவித்து, இயல்பான காரணங்களினுல் வாழ்வு முடிந்து அதன்மூலம் கிரீடத்தை வெற்றிகொள்ளுதல் என்பது அதே அளவுக்கு மாண்புமிக்கதாகவும், கடினமானதாகவும் உள்ளது"* (Coffman, *158).* [43]*"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "செல்வத்துடன் இருந்த ஏழை சபை" என்ற பாடத்தில் 2:9க்கான விளக்கங்களைக் காணவும்.* [44]*தொடக்க கால ஏழாம்நாள் அட்வென்ட்டிஸ்டுகள், 144,000 நபர்கள் மாத்திரமே பரலோகத்தில் கடைசியாக மீட்கப்படுவார்கள் என்று போதித்தனர். அவர்களின் உறுப்பினர்களுடைய எண்ணிக்கை அந்த எண்ணைத் தொட்டபோது, அவர்கள் அந்த போதனையைக் கைவிட்டனர். மற்ற சிறு மதக்குழுக்கள் இன்னமும் இதைப் போதித்து வருகின்றன. 144,000 பேர்கள் மாத்திரமே பரலோகத்தில் இருப்பார்கள் என்ற கருத்தைப் பராமரித்து வருகின்ற யெகோவா சாட்சியினர் இக்கருத்திற்கு முக்கியமான முன்மொழிவாளர்களாக உள்ளனர்.* (See Ed Sanders, "Revelation and the Cults," *Harding University Lectures* [1992]: 250.) *கறுப்பு முஸ்லீம்கள் இப்போது இவ்வசனத்தை அணுகி, 144,000 கறுப்பு மனிதர்கள் பரலோகத்தில் இருப்பார்கள் என்று போதிப்பதாக எனக்குக் கூறப்பட்டுள்ளது.* [45]*தேவனுடைய உண்மையான பிள்ளையாக உள்ள ஒவ்வொருவருக்கும், "அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரம் ... பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது" (1 பேதுரு 1:4, 5) என்று வேதாகமம் போதிக்கிறது.* [46]*எண்ணின் அடையாளத்துவப் பயன்பாடு பற்றி நீங்கள் உங்கள் சிந்தைக்குப் புத்துணர்வூட்ட விரும்பலாம். " வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "இங்கே வலுசர்ப்பங்கள் உள்ளன!" என்ற பாடத்தில் காணவும். விசேஷமாக, "12," "1,000," "144," மற்றும் "144,000" என்ற எண்களுக்கான விளக்கங்களை மறுபடியும் வாசிக்கவும்.* [47]*"கையொப்பம் இடப்பட்டு, முத்திரையிடப்பட்டு, வழங்கப்பட்ட" பதிவேடு, கட்டுப்படுத்தும் பதிவேடாக உள்ளது. "கையொப்பம் இடப்பட்டு, முத்திரையிடப்பட்டு, வழங்கப்பட்டது" என்று நாம் குறிப்பிடும் எதுவும், நிலைநாட்டப்பட்டது என்று கருதப்படுகிறது.* [48]*இது ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட்டால், உண்மையற்ற கிறிஸ்தவர்கள் மீளக்கட்டி எழுப்பப்படுதலை ஊக்குவிக்கவும் நீங்கள் விரும்புவீர்கள் (நடபடிகள் 8:22; யாக்கோபு 5:16).*

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *அதிகாரம் 6ன் வார்த்தைகளை மக்கள் வாசிக்கையில் எழுகின்ற எந்தக் கேள்விகளுக்கு அதிகாரம் 7 பதில் அளிக்கிறது?*
2. *''நான்கு'' என்ற எண்ணின் அடையாளத்துவ அர்த்தத்தை விளக்கவும்.*
3. *நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நான்கு காற்றுகள் யாவை?*
4. *முத்திரையிடப்பட வேண்டியவர்களாய் இருந்த ஊழியக்காரர்கள் யார்?*
5. *தேவன் எவ்வகையில் பாரபட்சமற்றவராக இருக்கின்றார்? தேவன் எவ்வகையில் பட்சபாதம் உள்ளவராக இருக்கின்றார்?*
6. *முத்திரையின் மூன்று நோக்கங்களைக் கூறவும்.*
7. *ஞானஸ்நானம் மற்றும் கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய முத்திரையிடப்படுதல் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள தொடர்பை விளக்கவும்.*
8. *இந்தப் பாடத்தின்படி, கிறிஸ்தவர்களின் நெற்றிகளில் முத்திரை யிடப்பட்டது என்ற உண்மையின் தனிச்சிறப்பு என்ன?*
9. *பன்னிரண்டு கோத்திரங்களினால் அடையாளப்படுத்தப்பட்டது என்ன (அல்லது யார்)?*
10. *144,000 என்ற எண்ணின் தனிச்சிறப்பை விளக்கவும்.*
11. *உங்களைப் பொறுத்தமட்டில், வெளிப்படுத்தின விசேஷம் 7:1-8ல் இருந்து கற்றுக் கொள்ளப்பட வேண்டிய மிக முக்கியமான பாடம் என்ன?*



*நான்கு தூதர்களும் பூமியின் நான்கு காற்றுகளைப் பிடித்திருத்தல் (7:1)*



தேவனுடைய ஊழியக்காரர்மீது ஒரு தூதன்
முத்திரை இடுதல் *(7:3)*